சுருக்கம்

சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை – ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் – கிராமப்பகுதி, பேரூராட்சி, நகராட்சி மற்றும் மாநகராட்சிகளில் உள்ள அங்கன்வாடி மையங்களில் 20,244 குழந்தைகளுக்கேற்ற கழிப்பிடங்கள் கட்டுவதற்கு ரூ.36.4392 கோடி நிதி ஒதுக்கீடு மற்றும் கண்காணிப்பு குழு அமைத்து நிர்வாக அளவிலான ஆணைகள் வெளியிடப்பட்ட அரசாணைக்கு சில திருத்தங்கள் செய்து – ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத் (சந7–1) துறை

அரசாணை (நிலை) எண்.71

நாள்.11.07.2013
விஜய, ஆனி 27
திருவள்ளுவராண்டு 2044

படிக்கப்பட்டது:

1. அரசாணை (நிலை) எண்.107, சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத் (சந7–1) துறை, நாள் 01.12.2011.
2. அரசாணை (நிலை) எண்.27, சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத் (சந7–1) துறை, நாள் 29.02.2012.
3. பேரூராட்சிகளின் இயக்குநரின் கடித எண்.6274/2012/இ3, நாள் 09.07.2012.
4. நகராட்சி நிர்வாகத்துறை ஆணையரின் கடித எண்.35277/2013/இ3, நாள் 14.09.2012
5. ஊரக வளர்ச்சித் துறை ஆணையரின் கடித எண். 34965/2012/TSC–1, நாள் 10.09.2012 மற்றும் 30.11.2012
6. அரசாணை (ப) எண்.75, ஊரக வளர்ச்சித் (பி.ஆர்1) துறை, நாள் 25.02.2013.
7. 2013–2014ம் ஆண்டிற்கான மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளின் அடிப்படைக் கட்டமைப்பு வசதிக்கான நிதிப்பற்றாக்குறையை ஈடுசெய்வதற்கான பங்களிப்புத் தொகைக்கான நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையில் ஜூன் மற்றும் ஜூலை மாதங்களில் கூட்டப்பட்ட கூட்டு கூட்டம்.

+++++

ஆணை :

பார்வை 1ல் படிக்கப்பட்டுள்ள அரசாணையில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் 12.09.2011 அன்று தமிழ்நாடு சட்டமன்ற பேரவை விதி 110ன் கீழ் அறிவிக்கப்பட்டபடி ரூ.23.78 கோடி செலவில் 29,727 அங்கன்வாடி மையங்களில் குழந்தைகளுக்கேற்ற கழிப்பிடங்கள் கட்டுவதற்கு கொள்கை அளவிலான ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

2. பார்வை 2ல் படிக்கப்பட்ட அரசாணையில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட முதன்மைச் செயலர் / சிறப்பு ஆணையர் கருத்துருவின் அடிப்படையில், ஒரு கழிப்பிடம் கட்டுவதற்கு ரூ.18,000/– வீதம் கிராமப்பகுதிகளில் உள்ள 15,387 அங்கன்வாடி மையங்கள், பேரூராட்சி பகுதிகளில் உள்ள 1,508 அங்கன்வாடி மையங்கள், நகராட்சி பகுதிகளில் உள்ள 1,319

அங்கன்வாடி மையங்கள் மற்றும் மாநகராட்சி பகுதிகளில் உள்ள 1,030 அங்கன்வாடி மையங்கள் என மொத்தம் 20,244 அங்கன்வாடி மையங்களில் குழந்தைகளுக்கேற்ற கழிப்பிடங்களை ரூ.36.4392 கோடி செலவில் கட்டுவதற்கு அனுமதி அளித்து நிர்வாக அனுமதியான ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

3. பார்வை 3ல் படிக்கப்பட்டுள்ள கடிதத்தில் பேரூராட்சிகள் இயக்குநர், பின்வருமாறு தெரிவித்துள்ளார். பார்வை 2ல் படிக்கப்பட்ட அரசாணையில் அனுமதிக்கப்பட்டுள்ள 1,508 குழந்தைகளுக்கேற்ற கழிப்பிடங்கள் கட்டுவதற்கு பதிலாக 484 குறைவாக எடுத்துக் கொள்ளப்பட்டு 1,024 குழந்தைகளுக்கேற்ற கழிப்பிடங்கள் கட்டுவதற்கு அனுமதி கோரியுள்ளார். நீலகிரி மாவட்டத்தில் உள்ள பேரூராட்சிகள் மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் அமைந்துள்ளதால் தரைப்பகுதியிலிருந்து மலைப்பகுதிக்கு பொருட்கள் கொண்டு செல்வதால் ஒரு கழிப்பிடம் கட்டுவதற்கு ரூ.22,000/- மதிப்பீடாக தயாரிக்கப்பட்டுள்ளது என்றும், எனவே 33 குழந்தைகளுக்கேற்ற கழிப்பிடங்கள் கட்டுவதற்கு ரூ.1,32,000/- கூடுதல் செலவினம் ஏற்படும் எனவும், மேலும் 484 குழந்தைகளுக்கேற்ற கழிப்பிடங்கள் குறைவாக எடுத்துக் கொள்ளப்பட்டதற்கான காரணங்களையும் தெரிவித்து தற்போது பேரூராட்சிப் பகுதிகளில் 1024 குழந்தைகளுக்கேற்ற கழிப்பிடங்களை ரூ.185.64 லட்சம் செலவில் கட்டுவதற்கும், அரசாணை (நிலை) எண். 27, சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை, நாள் 29.02.2012ல் பேரூராட்சிகளுக்கு அனுமதிக்கப்பட்ட ரூ.185.64 இலட்சம் நிதியை ஊரக வளர்ச்சி துறையின் மூலம் அல்லாமல் பேரூராட்சிகளுக்கு ஒதுக்கீடு செய்து அதனை பெற்று வழங்க திருத்திய ஆணை வழங்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

4. பார்வை 4ல் படிக்கப்பட்ட கடிதத்தில் நகராட்சி நிர்வாக ஆணையர் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார். நகராட்சி மற்றும் மாநகராட்சி பகுதிகளில் அமைந்துள்ள 2,349 அங்கன்வாடி மையங்களில் குழந்தைகளுக்கேற்ற கழிப்பிடங்களை ரூ.4.2282 கோடி செலவில் கட்டுவதற்கு அரசாணை (நிலை) எண்.27, சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை, நாள் 29.02.2012ல் வெளியிடப்பட்டுள்ள ஆணையின்படி, 2011-2012ம் நிதியாண்டில் ஒப்பளிப்பு செய்யப்பட்ட ரூ.60.00 லட்சத்தை மறு செல்லுபடியாக்கம் செய்ய வேண்டும் என்றும், மேலும் மேற்படி அரசாணையில் அனுமதிக்கப்பட்ட ரூ.4.2282 கோடியை நகராட்சி நிர்வாகத்துறை ஆணையர் நேரடியாக பெற்றுக் கொள்ளும் வகையில் நிதி ஒதுக்கீடு செய்து மேற்படி அரசாணைக்கு உரிய திருத்தங்கள் வழங்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

5. ஊரக வளர்ச்சித்துறை ஆணையர் தனது கருத்துருவில் அரசாணை (நிலை) எண்.27, சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை, நாள் 29.02.2012ல் அனுமதிக்கப்பட்டுள்ளவாறு முழு சுகாதாரத் திட்டத்தின் கீழ் குழந்தைகளுக்கேற்ற கழிப்பிடங்கள் கட்டுவதற்கு போதுமான நிதி ஆதாரம் இல்லாததால், மாநில நிதி ஆணைய மானியத்திலிருந்து 11,275 குழந்தைகளுக்கேற்ற கழிப்பிடங்கள் கட்டுவதற்கு நிதி ஒதுக்கீடு கோரியதற்கிணங்க பார்வை 6 ல் படிக்கப்பட்ட அரசாணையில் ரூ.9,02,00,000/- நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. மேலும் பார்வை 5ல் படிக்கப்பட்டுள்ள கடிதத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்துராஜ் ஆணையர் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார். 16,387 குழந்தைகளுக்கேற்ற கழிப்பிடங்கள் கட்டுவதற்கான சர்வே எடுக்கப்பட்டதில் 4,871 அங்கன்வாடி மையங்களுக்கு குழந்தைகளுக்கேற்ற கழிப்பிடங்கள் இல்லை என்றும், 3,811 அங்கன்வாடி மையங்களுக்கு கழிப்பிடங்கள் இருந்தும் சிறிய பழுதுகள் காரணமாக பயன்படுத்த இயலாததாக உள்ளன என்றும், 5,207 அங்கன்வாடி மையங்களில் குழந்தைகளுக்கேற்ற கழிப்பிடங்கள் இருந்தும் பெரிய பழுதுகள் காரணமாக பயன்படுத்த இயலாததாக உள்ளன என்றும், மேலும் 3,266 அங்கன்வாடி மையங்களில் குழந்தைகளுக்கேற்ற கழிப்பிடங்கள் இருந்தும் பழுதுகளை நீக்க இயலாததாக உள்ளன. எனவே, அரசாணையில் அனுமதிக்கப்பட்டுள்ளவாறு 17,895 குழந்தைகளுக்கேற்ற

கழிப்பிடங்களை கட்டுவதற்கு பதிலாக கிராம பஞ்சாயத்துக்களில் அமைந்துள்ள 13,344 அங்கன்வாடி மையங்களில் மட்டும் குழந்தைகளுக்கேற்ற கழிப்பிடங்களை கீழ்குறிப்பிட்டுள்ள அட்டவணையில் கண்டுள்ளவாறு கட்டுவதற்கும், மற்றும் 3,811 அங்கன்வாடி மையங்களில் பழுது நீக்கம் செய்வதற்கும் அனுமதி அளிக்குமாறும் மற்றும் அரசாணை (நிலை) எண். 27, சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை, நாள் 29.02.2012ல் கிராமப்புறங்களுக்காக விடுவிக்கப்பட்டுள்ள நிதியினை ரூ.160 கோடிக்கு மறுசெல்லுபடியாக்கம் செய்து ஆணை வழங்குமாறும், மேலும் மேற்படி அரசாணையில் ஒதுக்கப்பட்டுள்ள தொகையினை அந்தந்த கணக்கு தலைப்பின் கீழ் ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்றும் அத்தொகையினை பெற்று பணிகளை மேற்கொள்ள அனுமதி கோரியுள்ளார்.

| | நிதி பயன்பாட்டு விவரம் | | |
|---|---|---|---|
| குழந்தைகளுக்கேற்ற கழிப்பிடங்களின் எண்ணிக்கை (ஒரு கழிப்பிடத்திற்கு ரூ.10,000/– வீதம் (ரூ.10,000/– + ரூ.8,000/–) | பாரத் நிர்மல் அபியான் திட்டத்தின் கீழ் ரூ.8,000/– | மாநில நிதி ரூ.10,000/– | மாநில நிதி ஆணையம் மானியம் (ரூ.8,000/–) |
| 2069 | 2069x 8000/- | 2069x10000/- | -- |
| 2802 | -- | 2802x10000/- | 2802x8000/- |
| 3811 (சிறிய பழுதுகள்) | -- | -- | -- |
| 8473 | -- | 8473x10000/- | 8473x8000/- |
| 13,344 (சிறிய பழுதுகள் உள்ள 3811 குழந்தைகளுக்கேற்ற கழிப்பிடங்கள் நீங்கலாக) | 1,65,52,000/- | 13,34,40,000/- | 9,02,00,000/- |

6. பேரூராட்சிகளின் இயக்குநர், நகராட்சி நிர்வாக ஆணையர் மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் ஆணையர் ஆகியோரின் கருத்துருக்களை அரசு கவனமாக பரிசீலித்து, அரசாணை (நிலை) எண். 27, சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை, நாள் 29.02.2012ல் உள்ள பத்திகள் 9,10 க்கு, பதிலாக கீழ்க்கண்டுள்ள பத்திகளை சேர்த்து திருத்தங்கள் செய்து ஆணையிடுகிறது.

<u>திருத்தம்</u>

9. 1. மேலே 2ல் படிக்கப்பட்ட அரசாணையில் நகராட்சி மற்றும் மாநகராட்சிப் பகுதிகளில் அமைந்துள்ள 2,034 அங்கன்வாடி மையங்களில் குழந்தைகளுக்கேற்ற கழிப்பிடங்கள் கட்டும் பணிகளை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையருக்கு அனுமதி அளித்து அதற்கென ரூ.3,66,12,000/– ஐ பின்வரும் இரண்டு கணக்குத் தலைப்புகளின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

a. <u>மாநகராட்சி ரூ.1,71,54,000/– (953 குழந்தைகளுக்கேற்ற கழிப்பிடங்கள்)</u>

"3604 00 உள்ளாட்சி மன்றங்களுக்கும் ஊராட்சி நிறுவனங்களுக்கும் இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் 191– மாநகராட்சிகளுக்கு நிதியுதவி I திட்டத்தில் சேராதது AB அடிப்படைக் கட்டமைப்பு வசதிக்கான நிதிப்பற்றாக்குறையை ஈடுசெய்வதற்கான பங்களிப்புத் தொகை - 09. உதவித்தொகை 02 மூலதனச் சொத்து உருவாக்குவதற்கான உதவித் தொகை (க.தொ.கு. 3604 00 191 AB 0929)"

b. நகராட்சி ரூ.1,94,58,000/– (1081 குழந்தைகளுக்கேற்ற கழிப்பிடங்கள்)

"3604 00 உள்ளாட்சி மன்றங்களுக்கும் ஊராட்சி நிறுவனங்களுக்கும் இறப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் 192, நகராட்சிகள், நகராட்சி மன்றங்கள் முதலியவற்றுக்கு நிதியுதவி I திட்டத்தில் சேராதது AE அடிப்படைக் கட்டமைப்பு வசதிக்கான நிதிப்பற்றாக்குறையை ஈடுசெய்வதற்கான பங்களிப்பு தொகை 09 உதவித் தொகை 02 மூலதனச் சொத்து உருவாக்குவதற்கான உதவித் தொகை (கு.தொ.கு. 3604 00 192 AE 0921)"

ii. பார்வை 2ல் படிக்கப்பட்ட அரசாணையில் 32 மாவட்டங்களில் அமைந்துள்ள பேரூராட்சி பகுதிகளில் அமைந்துள்ள 1508 அங்கன்வாடி மையங்களில் குழந்தைகளுக்கேற்ற கழிப்பறைகள் கட்ட ஒரு கழிப்பறைக்கு ரூ.18,000/– வீதம் ஏற்கனவே செலவினம் அனுமதிக்கப்பட்டிருப்பினும், தற்பொழுது மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பின்படி பேரூராட்சிகளின் இயக்குநர் கோரியுள்ளவாறு 32 மாவட்டங்களில் அமைந்துள்ள 1024 அங்கன்வாடி மையங்களில் ரூ.184.32 லட்சம் செலவில் குழந்தைகளுக்கான கழிப்பறைகள் கட்ட பேரூராட்சிகள் இயக்குநருக்கு அனுமதி வழங்கப்படுகிறது. 1024 குழந்தைகளுக்கேற்ற கழிப்பிடங்களை கட்டும் பணிகளை பேரூராட்சிகளின் இயக்குநர் மேற்கொள்ள ரூ.184.32 இலட்சத்தை பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் நிதி ஒதுக்கீடும் அளிக்கப்படுகிறது.

பேரூராட்சிகள் ரூ.1,84,32,000/– (1024 குழந்தைகளுக்கேற்ற கழிப்பிடங்கள்)

"3604 00 உள்ளாட்சி மன்றங்களுக்கும் ஊராட்சி நிறுவனங்களுக்கும் இறப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் 193 நகர்புற உள்ளாட்சி அமைப்புகள், அறிவிக்கப்பட்ட பகுதி குழுமங்கள் அல்லது அதற்கு சமமான அமைப்புகளுக்கு உதவி I திட்டத்தில் சேராதது AC அடிப்படைக் கட்டமைப்பு வசதிக்கான நிதிப்பற்றாக்குறையை ஈடுசெய்வதற்கான பங்களிப்பு தொகை 09 உதவித் தொகை 02 மூலதனச் சொத்து உருவாக்குவதற்கான உதவித் தொகை (கு.தொ.கு. 3604 00 193 AC 0923)"

iii பார்வை 2ல் படிக்கப்பட்ட அரசாணையில் ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறையின் கீழ் கட்டுவதற்கு ஒதுக்கப்பட்டுள்ள 16,387 குழந்தைகளுக்கேற்ற கழிப்பிடங்களில் 2,069 கழிப்பிடங்களை கட்டுவதற்கு மட்டும் ஒரு கழிப்பிடத்திற்கு ரூ.18,000/–என்ற விகத்தில் (ரூ.10,000/–+ரூ.8,000/–) ரூ.10,000/– ஐ (2069xரூ.10,000/-) மாநில நிதியில் இருந்தும் மற்றும் ரூ.8,000/– ஐ (2069xரூ.8000/–) பாரத் நிர்மல் அபியான் திட்டத்தின் கீழ் ரூ.1,65,52,000/–ஐ பெற்று குழந்தைகளுக்கேற்ற கழிப்பறைகள் கட்டும் பணிகளை மேற்கொள்ள ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்துராஜ் ஆணையருக்கு அனுமதி வழங்கப்படுகிறது. மேற்குறிப்பிட்ட ரூ.1,65,52,000/–ஐ பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் நிதி ஒதுக்கீடும் அளிக்கப்படுகிறது.

"2215 குடிநீர் வழங்கலும் துப்புரவும் 02 கழிவு நீரகற்றலும் துப்புரவும் 105 துப்புரவுப் பணிகள் – பன்னிரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம் பணிகள் II மாநிலநிதித் திட்டம் JL முழுமையான துப்புரவு இயக்கம் – 09 உதவித்தொகை –03 குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித்தொகை (கு.தொ.கு.2215 02 105 JL 0931) (2069xரூ.8000=ரூ.1,65,52,000/–)"

IV. பார்வை 2ல் படிக்கப்பட்ட அரசாணையில் ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்துராஜ் துறையின் கீழ் கட்டுவதற்கு ஒதுக்கப்பட்டுள்ள 16,387 குழந்தைகளுக்கேற்ற கழிப்பிடங்களில் 2,802 கழிப்பிடங்களை கட்டுவதற்கு மட்டும் ஒரு கழிப்பிடத்திற்கு ரூ.18,000/– என்ற வீதத்தில் (ரூ.10000/–+ரூ.8,000/–) ரூ.10,000/– ஐ (2802xரூ.10,000/-) மாநில நிதியில் இருந்தும் மற்றும் ரூ.8000/– ஐ (2802xரூ.8000/–) மாநில நிதி ஆணைய மானியத்தின் கீழ் பெற்று குழந்தைகளுக்கேற்ற கழிப்பறைகள் கட்டுவதற்கு ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்துராஜ் ஆணையருக்கு அனுமதி வழங்கப்படுகிறது.

V. பார்வை 2ல் படிக்கப்பட்ட அரசாணையில் ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறையின் கீழ் கட்டுவதற்கு ஒதுக்கப்பட்டுள்ள 16,387 குழந்தைகளுக்கேற்ற கழிப்பிடங்களில் 8,473 கழிப்பிடங்களை ஒரு கழிப்பிடத்திற்கு ரூ.18,000/– வீதத்தில் (ரூ.10000/– + ரூ.8,000/–) கட்டுவதற்கு ரூ.10000/–ஐ மாநில நிதியில் இருந்தும் மற்றும் ரூ.8000/–ஐ மாநில நிதி ஆணைய மானியத்திலிருந்தும் பெற்று குழந்தைகளுக்கேற்ற கழிப்பறைகள் கட்டுவதற்கு ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்துராஜ் ஆணையருக்கு அனுமதி வழங்கப்படுகிறது.

VI. பார்வை 2ல் படிக்கப்பட்ட அரசாணையின்படி ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறையின் ஆணையர், அண்மையில் எடுக்கப்பட்ட சர்வேயின்படி பார்வை 5ல் படிக்கப்பட்ட கடிதத்தில் தெரிவித்துள்ளவாறு 3,811 கழிப்பிடங்களில் உள்ள சிறிய பழுதுகள் அங்கன்வாடி மையங்களில் உள்ள பழுதுகளை சரிசெய்யும் பொழுதே சரிசெய்யப்பட்டு உடனடியாக நிலைக்கு கொண்டு வரப்படும் என்பதால் இதற்கென தனியே எவ்வித நிதி ஒதுக்கீடும் தேவை இல்லை என்று ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் ஆணையர் குறிப்பிட்டுள்ளவாறு அவருக்கு 3,811 குழந்தைகளுக்கேற்ற கழிப்பிடங்களை எவ்வித நிதி ஒதுக்கீடு இல்லாமல் சிறிய பழுதுகளை மேற்கொள்ள அனுமதி வழங்கப்படுகிறது.

VII. பார்வை 2ல் படிக்கப்பட்ட அரசாணையில் கிராமப்புறங்களில் அமைந்துள்ள அங்கன்வாடி மையங்களில் 17,895 கழிப்பறைகள் (கிராமப் பஞ்சாயத்து –16,387 மற்றும் பேரூராட்சிகள் – 1508 = 17,895) கட்டும் பணிகளை ஊரக வளர்ச்சி ஆணையர் மேற்கொள்ள வேண்டும் என்பதற்கு பதிலாக, தற்போது பேரூராட்சிகளில் அமையவுள்ள 1024 மையங்கள் தவிர்த்து, கிராமப் பஞ்சாயத்துகளில் அமைந்துள்ள 16,387 அங்கன்வாடி மையங்களுக்கு பதிலாக 13,344 அங்கன்வாடி மையங்களில் மட்டும் குழந்தைகளுக்கேற்ற கழிப்பறைகள் கட்டும் பணிகளை மேற்கொள்ள ஊரக வளர்ச்சி ஆணையருக்கு அனுமதி வழங்கப்படுகிறது. ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்துராஜ் ஆணையர் 13,344 குழந்தைகளுக்கேற்ற கழிப்பிடங்கள் கட்டுவதற்கு ஏற்கனவே மாநில நிதி ஆணைய மானிய நிதி ஒதுக்கீடான ரூ.9,02,00,000/– போக மீதமுள்ள மாநில நிதியான ரூ.13,34,40,000/– ஐ கோரிக்கை எண்.42–02ன் கீழ் புதிதாகத் துவங்கப்படும் பின்வரும் கணக்குத் தலைப்பின்கீழ் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

> "2215 – குடிநீர் வழங்கலும் துப்புரவும் –02 கழிவு நீரகற்றலும் துப்புரவும் – 105 துப்புரவுப் பணிகள் – பன்னிரெண்டாம் ஐந்தாண்டு திட்டப்பணிகள் – II மாநிலத்திட்டம் -JN அங்கன்வாடி மையங்களில் குழந்தைகளுக்கு ஏற்ற கழிவறைகள் 09 உதவித்தொகை 03 குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை. (த.தொ.கு. 2215 02 105 JN 0937)"

இப்புதிய கணக்குத் தலைப்பிற்கு மதிப்பீடு, கணக்குரோமைப்பு மற்றும் கட்டுப்பாட்டு அதிகாரியாக ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் இருப்பார். மேற்சொன்ன புதிய கணக்குத்

தலைப்பினை தங்காது கணக்குகளில் தொடங்குமாறு சம்பளக் கணக்கு அலுவலர்/கருவூல அலுவலர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

viii. பார்வை 2ல் படிக்கப்பட்ட அரசாணையில் 20,244 குழந்தைகளுக்கேற்ற கழிப்பிடங்கள் (16,387 ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்துராஜ் + 1,508 பேரூராட்சிகள் 2,349 நகராட்சி/மாநகராட்சி நிர்வாகம்) கட்டுவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில் தற்போது அந்தந்த துறைத் தலைவர்களிடமிருந்து பெறப்பட்ட கருத்துருக்களின் அடிப்படையில் 16,402 அங்கன்வாடி மையங்களில் குழந்தைகளுக்கேற்ற கழிப்பிடங்கள் (13,344 ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்துராஜ் + 1,024 பேரூராட்சிகள் + 2,034 நகராட்சி நிர்வாகம்) கட்டுவதற்கு பத்தி 9(i) முதல் 9(v) மற்றும் 9(vii) ல் தெரிவிக்கப்பட்டுள்ள விவரங்களின்படி ரூ.20,50,36,000/–ல் (ரூபாய் இருபது கோடியே ஐம்பது இலட்சத்து முப்பத்தாறாயிரம் மட்டும்) (மாநில நிதி ஆணைய மானியமான ரூ.9,02,00,000/– நீங்கலாக) செலவினம் மேற்கொள்ள அந்தந்த துறைத் தலைவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

ix. அந்தந்த கணக்குத் தலைப்புகளின் கீழ் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள தொகைகளை சம்பந்தப்பட்ட துறைத் தலைவர்கள் (ஊரக வளர்ச்சி ஆணையர் மற்றும் பேரூராட்சிகளின் இயக்குநர் மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர்) பெற்று பணிகளை மேற்கொள்ள அனுமதி வழங்கப்படுகிறது.

10. மேலே பத்தி 9 (ii) ல் ஒப்பளிக்கப்பட்ட கூடுதல் செலவினத்தினை மேற்கொள்ள கூடுதல் நிதியொதுக்கம் 2013–2014 ஆம் ஆண்டுக்கான திருத்த மதிப்பீடு /இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். இந்நிதியொதுக்கம் செய்ய இருப்பதை எதிர்நோக்கி மேலே பத்தி 9(ii) ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையினை பெற்று வழங்கிட பேரூராட்சி இயக்குநர் அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார். மேலும் இச்செலவினத்தினை 2013–2014 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடு/இறுதி திருத்த மதிப்பீட்டில் சேர்ப்பதற்கு தவறாது உரிய நேரத்தில் நிதி (நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்) துறைக்கு உரிய கருத்துருவை அனுப்பி வைக்குமாறு பேரூராட்சிகள் இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

11. மேலே பத்தி 9 (vii) ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் "புதிய பணிகள்" (New Service) குறித்ததாகும். இதற்காக சட்டப்பேரவையின் ஒப்புதல் நாளடைவில் பெறப்படும். சட்டப்பேரவையின் ஒப்புதலைப் பெறும் வகையில் இத்திட்டத்திற்கான ஆரம்பச் செலவினம் எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து (contingency fund) முன்பணமாக பெற்று செலவிடப்படும். இதற்கான ஆணை நிதி (வரவு–செலவு பொது-I)த் துறையில் தனியாக வெளியிடப்படும். எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து தேவைப்படும் முன்பணத் தொகையினை பெறுவதற்கு, வரையறுக்கப்பட்ட படிவத்தில் இவ்வாணையின் இரு படிகளை இணைத்து நிதி (வரவு –செலவு பொது-I)த் துறைக்கு விண்ணப்பிக்குமாறு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும் இச்செலவினம் குறித்து சட்டப் பேரவையின் கவனத்திற்கு கொண்டு வரும் பொருட்டு, இவ்வாண்டின் துணை மதிப்பீட்டில் (Supplementary Estimate) சேர்த்திட இப்பணிக்கான மொத்த நிதியொதுக்கீடு, இந்த நிதியாண்டில் பணிகள் செலவாக்கத்திற்கு தேவைப்படும் செலவினம் ஆகிய விவரங்கள் உள்ளடக்கிய விளக்கக்குறிப்பு ஒன்றினை உரிய நேரத்தில் நிதி (வரவு –செலவு பொது-I)த் துறைக்கு அனுப்புமாறு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை கேட்டுக் கொள்ளப்படுகிறது.

12. பார்வை 2ல் படிக்கப்பட்ட அரசாணையின் இணைப்பு-1 ற்கு பதிலாக திருத்தங்களுடன் கூடிய 'புதிய இணைப்பு 1'ஐ வாசிக்கவும்.

13. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண்.20461/நிதி(சநு)/2013 நாள் 10.05.2013, அ.சா.கு.எண்.184/JS(AR)/நிதி(நதி (ம) கு.வ)/2013 நாள். 10.07.2013 இசைவு மற்றும் கூடுதல் நிதிப்பொறுப்பு கோப்பு எண்.219 (இருநூற்று பத்தொன்பது) உடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பெ.மு. பஷீர் அஹமது,
அரசு செயலாளர்.

பெறுநர்

முதன்மைச் செயலாளர்/ சிறப்பு ஆணையர்,
ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம்,
தரமணி, சென்னை-113
ஆணையர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை, சென்னை–15
ஆணையர், நகராட்சி நிர்வாகம், சென்னை–5.
இயக்குநர், பேரூராட்சிகள் இயக்ககம், குறளகம், சென்னை–108
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர் (தெற்கு/வடக்கு/கிழக்கு), சென்னை
மாநில கணக்காயர், சென்னை – 18
மாநில கணக்காயர் (தணிக்கை–I/II), சென்னை –18

நகல்

முதன்மைச் செயலர், நிதித்துறை, சென்னை–9
முதன்மைச் செயலர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை, சென்னை–9
முதன்மைச் செயலாளர் (கூடுதல் பொறுப்பு),
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை, சென்னை–9.
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9
மாண்புமிகு சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை அமைச்சரின் நேர்முக உதவியாளர்,
சென்னை–9.
நிதி (சநு) (ஊ.வ) (நதி (ம) கு.வ) (வ.செ.பொ-II) துறை, சென்னை–9.
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை, சென்னை–9
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை–9.
இருப்பு கோப்பு/ உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.

புதிய இணைப்பு – 1

அரசாணை (நிலை) எண்.71, சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்ட (சந7–1) துறை, நாள் 11.07.2013

ஊரக வளர்ச்சி, மாநகராட்சி மற்றும் நகராட்சி துறைகளால் அங்கன்வாடி மையங்களில் கட்டப்படவிருக்கும் குழந்தைகளுக்கேற்ற கழிப்பிடங்களின் விவரம்

| வ. எண். | மாவட்டம் | கிராம பஞ்சாயத்து | நகர பஞ்சாயத்து | மொத்தம் (3+4) | நகராட்சி | மாநகராட்சி | மொத்தம் (6+7) | ஒட்டு மொத்தம் (5+8) |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 1 | அரியலூர் | 233 | 5 | 238 | 0 | 0 | 0 | 238 |
| 2 | சென்னை | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| 3 | கோயம்புத்தூர் | 182 | 77 | 259 | 0 | 151 | 151 | 410 |
| 4 | கடலூர் | 615 | 25 | 640 | 0 | 0 | 0 | 640 |
| 5 | தருமபுரி | 397 | 8 | 405 | 0 | 0 | 0 | 405 |
| 6 | திண்டுக்கல் | 902 | 65 | 967 | 0 | 0 | 0 | 967 |
| 7 | ஈரோடு | 222 | 12 | 234 | 0 | 21 | 21 | 255 |
| 8 | கன்னியாகுமரி | 86 | 84 | 170 | 0 | 0 | 0 | 170 |
| 9 | காஞ்சிபுரம் | 621 | 37 | 658 | 259 | 0 | 259 | 917 |
| 10 | கரூர் | 177 | 52 | 229 | 0 | 0 | 0 | 229 |
| 11 | கிருஷ்ணகிரி | 428 | 16 | 444 | 0 | 0 | 0 | 444 |
| 12 | மதுரை | 733 | 40 | 773 | 154 | 287 | 441 | 1214 |
| 13 | நாகப்பட்டினம் | 296 | 3 | 299 | 0 | 0 | 0 | 299 |
| 14 | நாமக்கல் | 261 | 44 | 305 | 0 | 0 | 0 | 305 |
| 15 | நீலகிரி | 78 | 33 | 111 | 0 | 0 | 0 | 111 |
| 16 | பெரம்பலூர் | 246 | 12 | 258 | 0 | 0 | 0 | 258 |
| 17 | புதுக்கோட்டை | 101 | 6 | 107 | 0 | 0 | 0 | 107 |
| 18 | இராமநாதபுரம் | 561 | 7 | 568 | 0 | 0 | 0 | 568 |
| 19 | சேலம் | 305 | 75 | 380 | 115 | 184 | 299 | 679 |
| 20 | சிவகங்கை | 404 | 13 | 417 | 0 | 0 | 0 | 417 |
| 21 | தஞ்சாவூர் | 530 | 31 | 561 | 144 | 0 | 144 | 705 |
| 22 | தேனி | 59 | 55 | 114 | 0 | 0 | 0 | 114 |
| 23 | திருவள்ளூர் | 973 | 39 | 1012 | 0 | 0 | 0 | 1012 |
| 24 | திருவண்ணாமலை | 845 | 56 | 901 | 0 | 0 | 0 | 901 |
| 25 | திருநெல்வேலி | 477 | 26 | 503 | 111 | 21 | 132 | 635 |
| 26 | திருவாரூர் | 368 | 10 | 378 | 0 | 0 | 0 | 378 |
| 27 | திருப்பூர் | 164 | 42 | 206 | 79 | 69 | 148 | 354 |
| 28 | தூத்துக்குடி | 292 | 42 | 334 | 0 | 44 | 44 | 378 |
| 29 | திருச்சிராப்பள்ளி | 382 | 30 | 412 | 0 | 135 | 135 | 547 |
| 30 | வேலூர் | 958 | 24 | 982 | 219 | 41 | 260 | 1242 |
| 31 | விழுப்புரம் | 1235 | 33 | 1268 | 0 | 0 | 0 | 1268 |
| 32 | விருதுநகர் | 213 | 22 | 235 | 0 | 0 | 0 | 235 |
| | மொத்தம் | 13364 | 1024 | 14368 | 1081 | 953 | 2034 | 16402 |

பெ.மு. பஷீர் அஹமது,
அரசு செயலாளர்

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.